# யா/ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
# J/Hartley College, Point Pedro.

## முதலாம் தவணைப் பரீட்சை - 2020
## First Term Examination - 2020

| | | | | |
|---|---|---|---|---|
| தரம் - 10<br>Grade - 10 | 42 | T | I, II | 2.30 மணித்தியாலம்<br>2.30 Hours |

சுட்டெண்
Index No

## கர்நாடக சங்கீதம்

### பகுதி I

**பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அலங்காரத்தில் இடம் பெறும் ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை
(1) 7 (2) 8 (3) 10 (4) 12

02. பதத்தின் ஊடாக வெளிப்படும் ரஸம்
(1) திராட்சை ரசம் (2) கோபரசம் (3) சிருங்காரரசம் (4) பாதரசம்

03. கண்டஜாதி அடதாளத்தின் குறியீடு?
(1) $I_3I_3OO$ (2) $I_3OI_3$ (3) $I_5OI_5$ (4) $I_5I_5OO$

04. மத்தியமாவதி இராகத்தின் பண்
(1) குறிஞ்சி (2) முல்லை (3) செந்துருத்தி (4) கௌசிகம்

05. வில்லுப்பாட்டு நிகழ்ச்சியில் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள்
(1) ஹார்மோனியம், வீணை (2) ஹார்மோனியம், தபேல
(3) ஹார்மோனியம். விற்கடம் (4) ஹார்மோனியம், வயலின்

06. அலங்காரத்திற்குப் பின் முதன் முதலில் கற்பிக்கப்படும் சாகித்தியரூபமான உருப்படி
(1) வர்ணம் (2) ஜதீஸ்வரம் (3) கீதம் (4) கீர்த்தனை

07. தெலுங்குப் பதங்களில் பாடப்படும் கடவுள்
(1) கிருஷ்ணன் (2) முருகன் (3) அம்மன் (4) சிவன்

08. ஹரகரப்பிரியா இராகத்தின் மேள எண்
(1) 20 (2) 22 (3) 24 (4) 26

09. பதாநீ | பாதநீ | ஸ்ா | ஸ்ா || எனும் ஸ்வரத்தொகுதியில் அடுத்து வருவது.
(1) மபாதா | மாபதா | ந | நீ || (2) ஸ்நீதா | ஸ்ாநிதா | பா | பா ||
(3) கமாபா | காமபா | தா | தா || (4) நிதாபா | நீதபா | மா | மா ||

10. அப்பியாசகானம், சபாகானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி
(1) கீதம் (2) கீர்த்தனை (3) பதம் (4) வர்ணம்

11. திருவிசைப்பா பாடப்படும் இராகம்
(1) ஆனந்தபைரவி (2) மோகனம் (3) மந்தியமாவதி (4) சங்கராபரணம்

12. "உற்றுமை சேர்வது" என்ற தேவாரத்தின் பண்
(1) பழந்தக்கராகம் (2) பழம்பஞ்சுரம் (3) முல்லை (4) செந்துருத்தி

13. நேத்ர - ஸ்ரீ என குறிப்பிடப்படும் இராகம்
(1) மத்யமாவதி (2) மாயாமாளவகௌளை (3) தோடி (4) கல்யாணி



kalvi.lk

14. இந்தியாவின் தேசியவாத்தியம்
(1) வயலின் (2) வீணை (3) மிருதங்கம் (4) தபேலா

15. பக்தி இசைக்குரிய காலப்பகுதி
(1) 3ம், 4ம் நூற்றாண்டு (2) 7ம், 8ம் நூற்றாண்டு
(3) 12ம், 13ம் நூற்றாண்டு (4) 21ம் நூற்றாண்டு

16. பேரின்பப் பதங்களை இயற்றியவர்
(1) தியாகராஜர் (2) முத்துசாமிதீட்சிதர்
(3) முத்துத்தாண்டவர் (4) கோபாலகிருஷ்ணபாரதியார்

17. "விசித்திர சித்த, சங்கீர்ண" என்ற விருதினைப் பெற்ற மன்னன்
(1) முத்துத்தாண்டவர் (2) மகேந்திரவர்மன் (3) இராஜராஜ சோழன் (4) புரந்தரதாசர்

18. தோடி இராகம் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர்
(1) பக்கிமிரியம் ஆதியப்பையர் (2) தியாகராஜர்
(3) முத்துத்தாண்டவர் (4) தோடி சீதாராமையர்

19. "முன்னம் அவனுடைய நாமம்" எனும் தேவாரத்தை அருளியவர்
(1) அப்பர் (2) சுந்தரர்) (3) சம்பந்தர் (4) மாணிக்கவாசகர்

20. தாளம் போட்டு வாசிக்கக் கூடிய வாத்தியம்
(1) வயலின் (2) சித்தார் (3) வீணை (4) தம்புரா

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி II

**1ம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. (1) மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண, அவரோகணம் யாது?
(2) 24 மெட்டுக்களைக் கொண்ட வாத்தியம் யாது?
(3) ரீ கா, கமகா;; ரி எனும் ஸ்வரக்கோர்வையின் மொத்த அட்சரங்கள்?
(4) கண்ட ஜாதி அடதாளத்தின் மொத்த எண்ணிக்கைகள் எத்தனை?
(5) எல்லா ஸ்வரங்களும் கோமளமாக வரும் இராகம் யாது?
(6) சைவத்திற்கும், வைணவத்திற்கும் புத்துயிரளித்தவர்கள் யார்?
(7) முத்துத்தாண்டவர் ஒளிப்பிழம்பில் கலக்கும் போது பாடிய பாடல் யாது?
(8) "சிறையாரும் மடக்கிளியே" எனும் தேவாரத்தை அருளியவர் யார்?
(9) கடைக்கண்நோக்கி எனும் கீர்த்தனை அமைந்த ராகம் யாது?
(10) 12 ஸ்வரஸ்தானங்கள் உருவாக காரணமான ஸ்வரங்களை எவ்வாறு அழைப்பர்?
(11) மகேந்திரவர்ம மன்னனின் இசை ஈடுபாட்டைக் காட்டும் இரு கல்வெட்டுக்கள் எவை?
(12) வீணை வாசிப்பதில் பிரபல்யம் வாய்ந்த இரு கலைஞர் பெயர்களை தருக?

(12 புள்ளிகள்)

02. நீர் கற்ற அடதாள அலங்காரத்தை ராகம், ஆரோகண, அவரோகணம், இயற்றியவர் பெயர் என்பவற்றைக் குறிப்பிட்டு அங்க அடையாளங்களுடன் எழுதுக? (12 புள்ளிகள்)

03. பேரின்பப் பதங்களை இயற்றிய வாக்கேயகாரரி வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் தருக? (12 புள்ளிகள்)

04. (1) வீணையின் படத்தை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
(2) அதன் அமைப்பையும் வாசிக்கும் முறையையும் தருக?
(3) சுருதி சேர்க்கும் முறையைத் தருக?
(4) வீணை வாசித்துப் பிரபலமானோர் பெயர்களைத் தருக? (15 புள்ளிகள்)

05. 8வது மேளகர்த்தா இராகத்தின் இலட்சணத்தை எழுதுக? (12 புள்ளிகள்)

06. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக?
(1) ஜன்யராகம் (2) அப்பியாச வரிசைகள் (3) வில்லிசை (12 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community | Whatsapp Channel | Facebook Page